புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009, Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 180 | 04-01-2026 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volume 01 | Issue: 180 | 04-01-2026 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## கூட்டணி பிரச்சனை உள்கட்சி மோதல்: காங்கிரஸ் நிர்வாகிகளுடன் மேலிட பொறுப்பாளர் ஆலோசனை



சென்னை: ஜன.4–

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை சந்திக்க அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வரும் நிலையில் காங்கிரசுக்குள் விசுவரூபம் எடுத்து உள்ள உட்கட்சி பிரச்சனையும், தி.மு.க.வுடனான கூட்டணிவிவகாரங்களும் பெரும்பரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. தி.மு.க. கூட்டணியில் இந்த முறை அதிக தொகுதிகள் வேண்டும். அமைச்சரவையில் இடம் வேண்டும். அடுத்து வரப்போகும் உள்ளாட்சி தேர்தலில் குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க வேண்டும் என்று காங்கிரஸ் எதிர்பார்க்கிறது. இந்த கோரிக்கைகளுக்கு தி.மு.க.விடம் இருந்து உடனடியாக பதிலையும் எதிர்பார்க்கிறது. இது பற்றி கடந்த மாதம் 20ந்தேதிக்குள் முடிவெடுக்கும்படி காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரீஷ் சோடங்கர் தி.மு.க.விடம் வேண்டுகோள் வைத்தார். ஆனால் தி.மு.க. தரப்பில் உடனடியாக பேச்சுவார்த்தை குழு அமைக்க வாய்ப்பில்லை என்றும் தேர்தல் தேதி அறிவிக்கட்டும் என்றும் கூறி விட்டனர். வழக்கமாக தி.மு.க. பேசும் போது பேசிக்கொள்ளலாம் என்றுதான் காங்கிரசும் காத்திருக்கும். ஆனால் இந்த முறை விஜய் கட்சி என்ற புதிய வாய்ப்பும் இருப்பதால் அதை பயன்படுத்தி தி.மு.க.வுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள். கூட்டணி விவகாரத்தில் காங்கிரசுக்குள்ளும் இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. விஜய் கட்சியுடன் கூட்டணி அமைக்கலாம். அது மக்கள் மத்தியில் எதிர்பார்க்கப்படும் கூட்டணியாக இருக்கும். காங்கிரசும் வளர்ச்சி அடைய வாய்ப்பு உண்டு என்கிறார்கள் ஒரு தரப்பினர். ஆனால் தேர்தல் அனுபவம் இல்லாத கட்சியுடன் கூட்டணி அமைத்து விஷப்பரீட்சைக்கு தயாராக வேண்டுமா? தி.மு.க. வெற்றிக் கூட்டணி. எனவே அதில் தொடரலாம். கூடுதல் சீட் போன்ற விவகாரங்களை பேசி முடிவு செய்யலாம் என்கிறார்கள் மற்றொரு தரப்பினர். இந்த முறை காங்கிரசுக்கு தி.மு.க. 30 தொகுதிகள் வரை ஒதுக்கலாம் என்றும் இது தொடர்பாக தி.மு.க. தலைமையுடன் காங்கிரஸ் தலைவர் கார்கே பேசி உறுதி செய்வார் என்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்தனர். இதற்கிடையில் கரூர் எம்.பி. ஜோதிமணி, ஒரு சிலரின் சுயநலத்திற்காக தமிழக காங்கிரஸ் கொஞ்சம் கொஞ்சமாக அழிவு பாதையில் சென்று கொண்டிருப்பதாக கடுமையாக விமர்சித்தது கட்சிக்குள் புதிய புயலை கிளப்பி இருக்கிறது. ஜோதிமணியின் கருத்துக்கு மற்றொரு எம்.பி.யான மாணிக்கம் தாகூரும் ஆதரவு தெரிவித்து உள்ளார். தி.மு.க.வுடன்தான் கூட்டணி தொடர வேண்டும் என்றும் த.வெ.க.வுடன் செல்ல வேண்டும் என்றும் காங்கிரசில் இரு பிரிவாக இருப்பதன் வெளிப்பாடு தான் இந்த புதுப் பிரச்சனைக்கு காரணம் என்கிறார் கள். ஜோதி மணியின் விமர்சனத்தை பார்த்து ஆச்சரியப்பட்ட மாநில தலைவர் செல்வப்பெருந்தகை ஒரு மாநில தலைவர் என்ன

(தொடர்ச்சி 3ம் பக்கம்.)

## ரூ.109 கோடியில் அறநிலையத் துறையில் 19 புதிய திட்டப் பணிகள் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்



சென்னை. ஜன.4–

தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (3.1.2026) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 கோவில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, 15 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் 7 கோவில்களில் 10 முடிவுற்ற பணிகள் மற்றும் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்து சமய அறநிலையத் துறையானது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், கோவில்களுக்கு குடமுழுக்குகள், தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் கோவில்கள் மற்றும் முக்கிய கோவில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், ஒருகால பூசைத் திட்டம் விரிவாக்கம், ஒருகால பூசைத் திட்ட கோவில் களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் பிள்ளைகளுக்கு மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 11 கோவில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல் ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம், ராமநாத சுவாமி கோவிலில் 59.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அக்னி தீர்த்தம் படித்துறை, வாகன நிறுத்துமிடம், பிர்லா காட்டேஜ் பகுதி, கோவில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அடிப்படை வசதி மேம்படுத்தும் பணி உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல்; 16.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம், குற்றாலம், ஸ்ரீ பராசக்தி வித்யாலயா சி.பி.எஸ்.சி. பள்ளியில் புதியதாக 54 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்; திருவாரூர், தியாகராஜ சுவாமி கோவிலில் 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கமலாலய திருக்குளம் திருப்பணி, தேவாசிரிய மண்டபம் மற்றும் முன்மண்டபம் பழுது பார்த்து புதுப்பித்தல்; திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், கொண்டத்துக் காளியம்மன் கோவிலில் 6.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமாளிகைபத்தி மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், குலமங்கலம், பசுபதீஸ்வரர் கோவிலில் 3.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகாமண்டபம் மதில்சுவர் திரும்ப கட்டுதல்; சென்னை, வியாசர்பாடி, ரவீஸ்வரர் கோவிலில் 3.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்; தேனி மாவட்டம், குச்சனூர், சுயம்பு சனீஸ்வர பகவான் கோவிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம் கட்டுதல்; புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாளவிடுதி, அகஸ்தீஸ்வரர் கோவிலில் 2.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சன்னதி மகாமண்டபம் மதில்சுவர் திரும்ப கட்டுதல்; ஈரோடு மாவட்டம், பெருந்துறை, செல்லாண்டியம்மன் கோவிலில் 1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; பெருந்துறை, வாகைத்தொழுவம்மன் கோவிலில் 1.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ராஜகோபுரம் கட்டுதல்; திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு, சௌந்தரராஜப்பெருமாள் கோவிலில் 1.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வசந்த மண்டபம் கட்டுதல்; கோவை மாவட்டம், ஒத்தக்கால் மண்டபம், நவகோடி நாராயணப் பெருமாள் கோவிலில் 1.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுதல் என மொத்தம் 108.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியின் கூடுதல் வகுப்பறை கட்டடத்திற்கு தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார். மேலும் அவர் 7 கோவில்களில் 10 முடிவுற்ற பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள் திறந்து வைத்தல் மற்றும் சிற்றுந்துகளை தொடங்கி வைத்தல், கோவை மாவட்டம், தேக்கம்பட்டி, வனபத்ரகாளியம்மன் கோவிலில் 6.86 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட நடைபாதை மண்டபம், சுற்றுச்சுவர், முடி காணிக்கை மண்டபம் மற்றும் உடைமாற்றும் அறை; தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம், நாகநாத சுவாமி கோவிலில் 3.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; கோவை மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவிலில் 1.45 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி; நாமக்கல் மாவட்டம், காளிப்பட்டி, கந்தசாமி கோவிலில் 85 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய அன்னதானக் கூடம்; 1.81 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஏகாம்பரநாதர் கோவில் செயல் அலுவலர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம், தகட்டூர், பைரவநாத சுவாமி கோவில் செயல் அலுவலர் அலுவலகம், மயிலாடுதுறை மாவட்டம், திருஇந்தளூர், பரிமள ரங்கநாதர் கோவில் செயல் அலுவலர் அலுவலகம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி மற்றும் திட்டக்குடி, அரியலூர் மாவட்டம் கீழப்பழூவூர், இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி, மயிலாடுதுறை மாவட்டம் புத்தூர் மற்றும் சீர்காழி ஆகிய இடங்களில் 6 சரக ஆய்வாளர் அலுவலகங்கள்; ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 1.23 கோடி ரூபாய் செலவிலான 3 சிற்றுந்துகள் என மொத்தம் 15.30 கோடி ரூபாய் செலவிலான 10 முடிவுற்ற பணிகள், 6 சரக ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை தமிழ்நாடு முதல் அமைச்சர் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் துரை.ரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். காணொலிக் காட்சி வாயிலாக ராமேஸ்வரத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன். ராமநாதசுவாமி கோவில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் செல்லதுரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பொங்கல் பண்டிகையை ஒட்டி தென்மாவட்டங்களுக்கு சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது தெற்கு ரயில்வே

சென்னை: ஜன.4–

பொங்கல் பண்டிகையை ஒட்டி தென்மாவட்டங்களுக்கு சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது தெற்கு ரயில்வே. நாகர்கோவில் தாம்பரம் இடையே ஜன. 11, 18ம் தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்படும். தாம்பரம் கன்னியாகுமரி இடையே ஜன.12, 19ம் தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்படும். கன்னியாகுமரி தாம்பரம் நாகர்கோயில் இடையே ஜன.13, 20 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்படும்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பயணிகளின் வசதிக்காக வரும் ஜனவரி 8 ஆம் தேதி முதல் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என அறிவித்துள்ளது தெற்கு ரயில்வே. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு கூடுதல் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகிறது. இன்று (4 ஆம் தேதி) காலை 8 மணிக்கு முன்பதிவு தொடங்கும் என அறிவித்துள்ளது.

நாட்டில் முக்கிய போக்குவரத்துகளில் ஒன்றாக இருப்பது ரயில் சேவை. ரயில்களில் தினமும் லட்சக்கணக்கான மக்கள் பயணித்து வருகின்றனர். குறிப்பாக, பண்டிகை நாட்கள், விடுமுறை நாட்களில் பயணிகளின் கூட்டம் அலைமோதும். இதனால், பண்டிகை நாட்களில் ரயில்வே நிர்வாகம் சிறப்பு ரயில்களை இயக்கி வருகிறது. அந்த வகையில், ஜனவரி 15ஆம் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், சொந்த ஊர்களுக்கு மக்கள் செல்வார்கள்.

இதனை கருத்தில் கொண்டு, பயணிகளுக்காக சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என அறிவித்துள்ளது தெற்கு ரயில்வே. சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், நெல்லை உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஜனவரி 11ஆம் தேதி முதல் ஜனவரி 17ஆம் தேதி வரை சிறப்பு ரயில்கள் இயக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:

நாகர்கோவிலில் இருந்து தாம்பரம் செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்; 06012) வருகிற 11 மற்றும் 18 ஆகிய தேதிகளில் (ஞாயிற்றுக்கிழமை) நாகர்கோவிலில் இருந்து இரவு 11 மணிக்கு புறப்பட்டு, அடுத்த நாள் காலை 10.15 மணிக்கு தாம்பரம் வந்து சேரும். மறுமார்க்கத்தில், தாம்பரத்தில் இருந்து நாகர்கோவில் செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்: 06011) வருகிற 12 மற்றும் 19 ஆகிய தேதிகளில் (திங்கட்கிழமை) தாம்பரத்தில் இருந்து இரவு 3.30 மணிக்கு புறப்பட்டு, அடுத்த நாள் காலை 3.30 மணிக்கு நாகர்கோவில் சென்றடையும்.

திருநெல்வேலியில் இருந்து செங்கல்பட்டு செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்: 06156) வருகிற 09 மற்றும் 16 ஆகிய தேதிகளில் (வெள்ளிக்கிழமை) திருநெல்வேலியில் இருந்து அதிகாலை 3.45 மணிக்கு புறப்பட்டு, அதே நாளில் மதியம் 01.15 மணிக்கு செங்கல்பட்டு சென்றடையும். மறுமார்க்கத்தில், செங்கல்பட்டில் இருந்து திருநெல்வேலி செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்: 06055) வருகிற 09 மற்றும் 16 ஆகிய தேதிகளில் (வெள்ளிக்கிழமை) செங்கல்பட்டில் இருந்து மதியம் 3.30 மணிக்கு புறப்பட்டு, அடுத்த நாள் அதிகாலை 2 மணிக்கு திருநெல்வேலி வந்துசேரும்.

திருநெல்வேலியில் இருந்து செங்கல்பட்டு செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்: 06158) வருகிற 10 மற்றும் 17 ஆகிய தேதிகளில் (சனிக்கிழமை) திருநெல்வேலியில் இருந்து அதிகாலை 3.45 மணிக்கு புறப்பட்டு, அதே நாளில் மதியம் 01.15 மணிக்கு செங்கல்பட்டு சென்றடையும். மறுமார்க்கத்தில், செங்கல்பட்டில் இருந்து திருநெல்வேலி செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்: 06057) வருகிற 10 மற்றும் 17 ஆகிய தேதிகளில் (சனிக்கிழமை) செங்கல்பட்டில் இருந்து மதியம் 5 மணிக்கு புறப்பட்டு, அடுத்த நாள் அதிகாலை 3 மணிக்கு திருநெல்வேலி வந்துசேரும்.

கோயம்புத்தூரில் இருந்து சென்னை சென்ட்ரல் செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்: 06034) வருகிற 11 மற்றும் 18 ஆகிய தேதிகளில் (ஞாயிற்றுக்கிழமை) கோயம்புத்தூரில் இருந்து இரவு 11.30 மணிக்கு புறப்பட்டு. அடுத்த நாள் காலை 9.50 மணிக்கு சென்னை சென்ட்ரல் சென்றடையும். மறுமார்க்கத்தில், சென்னை சென்ட்ரலில் இருந்து கோயம்புத்தூர் செல்லும் சிறப்பு ரயில் (வண்டி எண்: 06033) வருகிற 12 மற்றும் 19 ஆகிய தேதிகளில் (திங்கட்கிழமை) சென்னை சென்ட்ரலில் இருந்து இரவு 11.25 மணிக்கு புறப்பட்டு, அடுத்த நாள் காலை 9 மணிக்கு கோயம்புத்தூர் வந்துசேரும்.

## புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு ஜாக்டோ ஜியோ வரவேற்பு: கால வரையற்ற போராட்ட அறிவிப்பு வாபஸ்





“புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அறிவித்துள்ளார். முதல்அமைச்சரின் இந்த அறிவிப்பு அரசு ஊழியர்கள் சங்கங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன. சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து அவருக்கு இனிப்பு வழங்கி, அரசு ஊழியர்கள் நன்றி தெரிவித்தனர். தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த ஜாக்டோ ஜியோ அமைப்பினர், \"23 ஆண்டு கால ஓய்வூதியம் இல்லாத நிலைமைக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஓய்வூதிய திட்டத்தை நாங்கள் எதிர்பார்த்தது போன்று வழங்கியமைக்கு முதல் அமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றிகள். முதல் அமைச்சரின் அறிவிப்பை ஜாக்டோ ஜியோ அமைப்பு பெருமகிழ்வோடு வரவேற்று நன்றி தெரிவிக்கிறது. நாங்கள் எதிர்பார்த்த ஓய்வூதிய திட்டம் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது\" என்று தெரிவித்தனர். மேலும் ஜனவரி 6ந்தேதி முதல் நடக்க இருந்த வேலை நிறுத்த போராட்டத்தை வாபஸ் பெறுவதாக ஜாக்டோ ஜியோ அறிவித்துள்ளது.”,

# வீரபாண்டிய கட்டபொம்மன் 267வது பிறந்த நாள் விழா இளைஞர் அணி சார்பில் அமைதிப் பேரணி நடைபெற்றது!!




திருப்பூர் ஜன 04

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி அருகே சுதந்திர போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 267 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு வீர பாண்டிய கட்டபொம்மன் இளைஞர் அணி சார்பில் அமைதிப் பேரணி, அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டு, பொது மக்களுக்கு அன்னதானம், இனிப்புகள், மரக்கன்றுகள் வழங்கியும் சிறப்பிக்கப் பட்டது.

இந்த விழாவினை திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மு.பெ. சாமிநாதன். ஈரோடு மத்திய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் ஆகியோர் விழாவினை துவக்கி வைத்து மாவீரன் வீரபாண்டி கட்ட பொம்மன் வாழ்க்கை வரலாற்று சிறப்புமிக்க திரைப்படம் வீரபாண்டி கட்டபொம்மன் வசனத்தை உரையாற்றி இளைஞர்களுக்கு விழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சங்கர் சாமி வீரபாண்டிய கட்ட பொம்மன் இளைஞர் அணி கௌஷிக் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்து முடித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஒன்றிய செயலாளர் மொரட்டு பாளையம் பிரபு, அரவிந்த், கௌதம் ரவி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## ஜன.7 முதல் 20ம் தேதி வரை அதிமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு மண்டலம் வாரியாக சுற்றுப் பயணம்

சென்னை: ஜன.4–

ஜனவரி.7 முதல் 20ம் தேதி வரை அதிமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு மண்டலம் வாரியாக சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய தரவுகளை பெறுவதற்காக அதிமுக குழு சுற்றுப் பயணம் நடத்துகிறது. வேலூர், சேலம், விழுப்புரம், திருச்சி, தஞ்சை, சிவகங்கை மண்டலங்களில் அதிமுக குழு கருத்துக் கேட்க உள்ளது.

# கள்ளக்குறிச்சி மாணவ மாணவிகள் கராத்தே போட்டியில் சாதனை..




கள்ளக்குறிச்சி ஜன 04

கள்ளக்குறிச்சி மாவட்ட கராத்தே சங்கத்தின் சார்பாக மாவட்ட அளவிலான கராத்தே போட்டி நடைபெற்றது.

இதில் 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் சடையம்பட்டு மற்றும் செல்லம்பட்டு கிராமத்தை சேர்ந்த சாம்பியன்ஸ் மேக்கர் அகாடமி மாணவ மாணவியர்கள் 13 தங்கப் பதக்கத்தையும் 9 பேர் வெள்ளி பதக்கத்தையும் 2 பேர் வெண்கல பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

இதில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவ மாணவிகள் ஜனவரி மாதம் 4 தேதி நடைபெற உள்ள மாநில அளவிலான கராத்தே போட்டியில் கலந்துகொள்ள உள்ளனர். இவர்களை பாராட்டி கள்ளக்குறிச்சி மாவட்ட கராத்தே சங்கத்தின் தலைவர் செங்குட்டுவன், செயலாளர் கோபு, சேர்மன் ஏழுமலை மற்றும் சாம்பியன்ஸ் மேக்கர் அகாடமியின் தலைமை பயிற்சியாளர் பிரகாஷ்ராஜ் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை கொடுத்து பாராட்டினர்.

# சேலம் மாவட்டத்தில் 6 டன் கலப்பட வெல்லம் பறிமுதல்.

சேலம். ஜன.4–

சேலம் மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு துறையினர் பல்வேறு இடங்களில் நடத்திய சோதனையில்,6 டன் கலப்பட வெல்லம் பறிமுதல் செய்யப்பட்டது.



பொங்கல் பண்டிகை நெருங்கிவரும் நிலையில், சேலம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கரும்பாலைகளில் வெல்லம் தயாரிப்புப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. பல்வேறு இடங்களில் நிறம் மற்றும் எடைக்காக வெல்லம் தயாரிப்பில் கலப்படம் செய்யப்படுவதாக உணவுப் பாதுகாப்பு துறைக்கு புகார்கள் வந்தன. இதனடிப்படையில், உணவுப் பாதுகாப்பு துறை அதிகாரிகள் மாவட்டம் முழுவதும் பல்வேறு கரும்பாலைகளில் முன் அறிவிப்பின்றி திடீர் சோதனை மேற்கொண்டனர்.

தாரமங்கலம், ஓமலூர், காமலாபுரம், தீவட்டிப்பட்டி, எடப்பாடி, கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளில் சோதனை நடைபெற்றது. கடந்த 10 நாள்களாக நடைபெற்ற சோதனையில் கலப்பட வெல்லம் 6 டன்னும், கலப்படமாக சேர்க்க இருப்பு வைத்திருந்த வெள்ளை சர்க்கரை 3 டன்னும் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், கலப்பட வெல்லம் தயாரித்த 15 ஆலைகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள் ளதாகவும், விதிமுறைகளை பின்பற்றாத ஓமலூரில் உள்ள ஆலை இயங்க தடை விதிக்கப்பட்டுள்ள தாகவும் உணவுப் பாதுகாப்பு துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து ஆய்வுகள் நடைபெறும் எனவும், கலப்பட வெல்லம் தயாரித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# ஜன.15ல் அவனியாபுரம், 16ல் பாலமேடு, 17ல் அலங்காநல்லூர்: மதுரை ஜல்லிக்கட்டு தேதிகள் அறிவிப்பு

மதுரை; ஜன,4

மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் நடப்பாண்டு நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டி தேதிகளை மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் அறிவித்தார்.

உலக அளவில் வீர விளையாட்டாக இருக்கக் கூடிய ஜல்லிக்கட்டு போட்டிகள், மதுரை மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறப்பாக நடைபெறும். கடந்த 2025ம் ஆண்டு மிக சிறப்பாக மதுரையில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்றன. அதுபோல், நடப்பாண்டும் சிறப்பான முறையில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவதற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதற்கு இணங்க, 2026ம் ஆண்டு வரும் 15ம் தேதி அவனியாபுரத்திலும், 16ம் தேதி பாலமேட்டிலும், 17ம் தேதி அலங்காநல்லூரிலும் உலக புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுபோட்டிகள் நடைபெறுகின்றன. உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல்படி அனைத்து வழிகாட்டுநெறிமுறைகளையும் பின்பற்றி ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறவுள்ளது.

இதற்கான ஆலோசனைக்கூட்டம் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வணிகவரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா, மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் நீதிமன்றம் அறிவுரைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் விளக்கி கூறப்பட்டது என மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்.

# ஒன்றிணைந்தாலே அ.தி.மு.க. வெற்றி உறுதி ஓ.பன்னீர்செல்வம்

“போடி: ஜன4–

தேனி மாவட்டம் போடியில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:அ.தி.மு.க.வில் பிரிந்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதுதான் அ.தி.மு.க. தொண்டர்களின் எதிர்பார்ப்பு. அனைவரும் ஒருங்கிணைய வேண்டும் என்பது சாத்தியமா என்பதற்கு சாத்தியப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கமே. அதற்காகத்தான் இந்த போராட்டம். இன்று மக்களுடைய குரலாக அது ஒலித்துக் கொண்டிருக்கிறது. அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு செய்ய வேண்டும் என்று குரல் கொடுத்த செங்கோட்டையன் தற்போது த.வெ.க.வில் இணைந்து விட்டார். அ.தி.மு.க. ஒருங்கிணைய வேண்டும்



என்று முதன் முதலில் குரல் கொடுத்தது நான் தான். தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறி வெகு நாள் ஆகிவிட்டது.நாங்கள் அமித்ஷாவிடம் சென்று தமிழகத்தினுடைய அரசியல் கள நிலவரங்களை தெரிவித்து வந்தோம். எம்.ஜி.ஆர். இந்த இயக்கத்தை உருவாக்கியபோது தொண்டர்களால் உருவாக்கப்பட்ட கட்சி என்ற அடிப்படையில் அதன் சட்ட விதிமுறைகள் உருவாக்கப்பட்டது.ஆனால் தற்போது அவைகள் மீறிவிட்டது மீண்டும் எம்.ஜி.ஆர். உடைய இயக்கத்தை நிலை நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் பல சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி தற்போது வரை நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து போராடி வருகிறோம். கழக சட்ட விதிகளை கேள்விக்குறியாகி விடக்கூடாது என்பதில் முழு மூச்சாக இயங்கி வருகிறோம்.ஜே.சி.டி. பிரபாகர் த.வெ.க.வில் இணைந்தாலும் என்னுடன் தொடர்பில் உள்ளார். மேலும் பலர் எங்கு சென்றாலும் எங்களுக்கு கவலை இல்லை. எங்களை பொறுத்தவரை அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும் என்பதற்காகத்தான் தொடர்ந்து சட்ட போராட்டம் நடத்தி வருகிறோம். அனைவரும் ஒன்றிணைந்தாலே வெற்றி உறுதி. கட்சி விதிகளை மீட்டெடுக்கும்வரை எங்களது சட்டபோராட்டம் தொடரும் என்றார். “,

## ”வீரமங்கை வேலு நாச்சியார் சிலைக்கு விஜய் மரியாதை ,

“சென்னை, ஜன.4

தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திப்



போராடி, தாய் மண்ணை மீட்ட முதல் இந்தியப் பெண் போராளி! சமூக சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த எழுச்சிக் கனல்! எம் கொள்கைத் தலைவர், வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் கழகத்தின் தலைமை நிலையச் செயலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன்.தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்த வீரமங்கை ராணி வேலு நாச்சியார் அவர்களின் வழியில், மக்கள் விரோத ஆட்சியாளர்களை விரட்டி, மக்கள் விரும்பும் மக்களாட்சியை அமைக்க உறுதியேற்போம் என தெரிவித்துள்ளார்.”,

# புதுச்சேரி சட்டசபைத் தேர்தல்: காங்கிரஸ் தலைவர் வைத்தியலிங்கம் மற்றும் மகளிர் அணி தலைவி நிஷா ஆகியோர் போட்டியிட வலியுறுத்தி விருப்பமனு தாக்கல்!



புதுச்சேரி: ஜன.4–

புதுச்சேரி சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்பமனு விநியோகம் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், மாநில காங்கிரஸ் தலைவர் மற்றும் மாநில மகளிர் காங்கிரஸ் தலைவி ஆகியோர் குறிப்பிட்ட தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என வலியுறுத்தி மகளிர் காங்கிரசார் விருப்பமனு தாக்கல் செய்துள்ளனர்.

புதுச்சேரி மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வி.வைத்தியலிங்கம் அவர்கள், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மண்ணடிப்பட்டு தொகுதியில் போட்டியிட வேண்டும் என வலியுறுத்தி, புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸ் தலைவி திருமதி. ஏ.ஆர். நிஷா அவர்கள் தலைமையில் 60க்கும் மேற்பட்ட மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஒன்றிணைந்து விருப்பமனு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து, புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸ் தலைவியான திருமதி. ஏ.ஆர்.நிஷா அவர்களும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என வலியுறுத்தி, மாநில மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகள் விருப்பமனு தாக்கல் செய்தனர். குறிப்பாக, முதலியார்பேட்டை, உப்பளம், உருளையன்பேட்டை அல்லது வில்லியனூர் ஆகிய தொகுதிகளில் ஏதேனும் ஒன்றில் அவர் களம் இறங்க வேண்டும் என அந்த மனுவில் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது ஏராளமான மகளிர் காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உடனிருந்தனர்.

# உருளையன்பேட்டை பெரியபாளையத்தம்மன் கோவில் கும்பாபிஷேகப் பணிக்கு பாஜக நிர்வாகி ரூ.50,000 நிதியுதவி



புதுச்சேரி: ஜன.4–

உருளையன்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியபாளையத்தம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள கும்பாபிஷேகத் திருப்பணிகளுக்காக, பாரதிய ஜனதா கட்சியின் மாநில வர்த்தகப் பிரிவு இணை அமைப்பாளரும், உருளையன்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் பூத் கமிட்டி பொறுப்பாளர் (BLA-1) திரு. மதன் அவர்கள் ரூபாய் 50,000 ரொக்கத்தை நன்கொடையாக வழங்கினார்.

இந்த நிதியுதவியை அவர் ஆலய நிர்வாகிகளிடம் வழங்கினார். இந்நிகழ்வின் போது பாஜக அறிவுசார் பிரிவு மாவட்டத் தலைவர் திரு. அருள் பாலாஜி, சிறுபான்மை அணி மாநிலச் செயலாளர் திரு. முனவர் முன்னா, உருளையன்பேட்டை தொகுதி துணைத்தலைவர் திரு. விஜயபாஸ்கர், வர்த்தகப் பிரிவின் நகர மாவட்ட இணை அமைப்பாளர் திரு. ஏழுமலை மற்றும் திரு. வெற்றிவேல் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் ஆலய நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# மாற்றுத்திறன் மாணவர்களுக்கான மதிப்பீட்டு மருத்துவ முகாம்



வந்தவாசி, ஜன 04:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்தின் உள்ளடக்கிய கல்வித்திட்டம் 2025 26 கல்வி ஆண்டிற்கான, மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான இலவச மருத்துவ முகாம், வந்தவாசி அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் நேற்று நடைபெற்றது. நிகழ்விற்கு பள்ளி தலைமையாசிரியர் ஞானசம்பந்தன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி அலுவலர் டி. தரணி, மேற்பார்வையாளர் டி.ஜெயசீலன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக, நகர் மன்ற தலைவர் ஜலால், மாவட்ட உதவி திட்ட அலுவலர் சத்யா, மாற்றுத்திறனாளி நல அலுவலர் கோ.மாலதி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தண்டபாணி ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி முகாமை துவக்கி வைத்தனர். ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கிழக்கு தலைமை ஆசிரியை சித்ரா நிகழ்வை தொகுத்து வழங்கினார். வட்டார ஒருங்கிணைப்பாளர் கமலக்கண்ணன் நன்றி கூறினார். இந்த முகாமில், 138 பேர் பங்கேற்று பயன்பெற்றனர். அவர்களுக்கு, மனநலம், குழந்தைகள் நலம், கண், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவர்கள் அடங்கிய குழுவினர், பல்வேறு நோய்களுக்கு பரிசோதனை செய்தனர். மேலும் 9 பேருக்கு, புதிய அடையாள அட்டை, 20பேருக்கு அடையாள அட்டை புதுப்பித்தல், 16 பேருக்கு பஸ் பாஸ் வழங்க பரிந்துரை செய்யப்பட்டது. ஆசிரியர் பயிற்றுனர்கள் பார்த்திபன் , திருவேங்கடலெட்சுமி, சிறப்பு பயிற்றுனர்கள் எமல்டாராணி, லத்தீப், லதிஷா மேரி ,பச்சையம்மாள், இயன்முறை மருத்துவர் அரசு, ஒன்றிய கணக்காளர் பானுசந்தர், பள்ளி ஆசிரி யர்கள் ராமச்சந்திரன் மற்றும் விஜயகாந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பள்ளி என்எஸ்எஸ் மாணவர் களும், ஒருங்கிணைப் பாளர்களும் தன்னார்வலர்களாக பணி செய்தனர். இதில் ஆறு ஒன்றியங்களைச் சார்ந்த சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் பிசியோதெரபி கலந்து கொண்டனர். வட்டார ஒருங்கிணைப்பாளர் கமலக்கண்ணன் நன்றி கூறினார்.



சேலம் மாவட்டம் தாரமங்கலம் வட்டாரம், கே.ஆர்.தோப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் சௌண்டம்மாள் ஆகியோர் உள்ளனர்.

# திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோவிலில் ஆருத்ரா அபிஷேகத்தில் நடராஜ பெருமானுக்கு 33 வகையான பழ அபிஷேகங்கள்



திருவள்ளூர் ஜன 04 :

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி முருகன் கோவிலின் உபகோவிலான, திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோவில், சிவபெருமான் திருநடனம் புரிந்த ஐந்து சபைகளில், முதல் சபை என்பதால். ரத்தினசபை என்றழைக்கப்படுகிறது. மார்கழி மாதம், திருவாதிரை நட்சத்திரத்தில் நடராஜருக்கு அபிஷேகம் நடப்பதையே, ஆருத்ரா தரிசனம் என்று அழைக்கப்படுகிறது. அந்த வகையில், இரவு, திருவாதிரை நட்சத்திரத்தையொட்டி திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோவிலில் அதிகாலை வரை நடந்த ஆருத்ரா அபிஷேகத்தில் 33 வகையான பழ அபிஷேகங்கள் நடராஜ பெருமானுக்கு செய்யப்பட்டது.

இதில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்தனர். இரவு 9 மணிக்கு, ரத்தின சபாபதி பெருமான் கோவில் வளாகம் பின்புறத்தில் உள்ள ஸ்தலவிருட்சத்தின் கீழ், ஆருத்ரா அபிஷேக மண்டபத்திற்கு எழுந்தருளினார். அங்கு, ஆயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் விபூதி அபிஷேகத்துடன் ஆருத்ரா அபிஷேகம் விழா துவங்கியது. பின்னர் பால், தேன், இளநீர், மாதுளம், வாழைப்பழம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 33 வகையான அபிஷேகங்கள் நேற்று, அதிகாலை, 3:30 மணி வரை நடைபெற்றது. காலை 5 மணிக்கு, நடராஜ பெருமான் ஆலமர பிரகாரத்தை வலம் வந்து, கோபுர தரிசனத்திற்கு வந்த பின், திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளினார்.

ஆருத்ரா அபிஷேக விழாவை முன்னிட்டு சிறப்பாக நடந்தது. இவ்விழாவில் சென்னை, காஞ்சிபுரம் தமிழகத்திலிருந்து பல பகுதிகளிலிருந்து சிவனடியார்கள் விரதம் இருந்து வந்து இந்த ஆரூத்ரா திரசனத்தை கண்டு வழிபட்டனர். விழா ஏற்பாடுகளை திருத்தணி முருகன் கோயில் ஆணையர் ரமணி மற்றும் கோவில் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# மணப்பாறை அருகே கிராம ஊராட்சியை இரண்டாக பிரித்ததை ரத்து செய்ய வலியுறுத்தி 18 கிராம மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்.



திருச்சி. ஜன.4–

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ளது புத்தாநத்தம் ஊராட்சி. தற்போது இந்த ஊராட்சி புத்தாநத்தம் ஊராட்சி, இடையபட்டி ஊராட்சி என இரண்டாக பிரித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே ஊராட்சியை இரண்டாக பிரிக்கக் கூடாது என்று தலைமைச் செயலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் பலமுறை மனுக்கள் கொடுத்தும் மக்களின் எதிர்ப்பை மீறி தற்போது பஞ்சாயத்து இரண்டாக பிரித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் ஊராட்சியை சரி சமமாக பிரிக்காமல் ஒரு தலைப்பட்சமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஊராட்சியை இரண்டாக பிரிப்பதால் பொருளாதார ரீதியாக ஒரு ஊராட்சி வளர்ச்சியும் மற்றொரு ஊராட்சி பின்னடைவையும் சந்திக்கும், அதேபோல் பூலோக ரீதியாகவும் பல இன்னல்களுக்கு மக்கள் தள்ளப்படுவார்கள் எனவும் கிராம மக்களின் அடிப்படை உரிமைகள் பறிபோகும். அரு அறிவிக்கும் நிதிகள் 90 சதவீதம் புத்தாநத்தம் ஊசிக்கும் 10 சதவீத நிதி மட்டுமே இடைப்பட்டியை ஊராட்சி கிடைக்கும் நிலை ஏற்படும் அரசு அறிவிக்கும் சலுகையில் நடைபெற்ற ஊராட்சிக்கு 100 சதவீதம் கிடைக்க வாய்ப்பு இல்லாத சூழ்நிலை உருவாகும் என்பதுடன் மக்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படும் என்பதால் ஊராட்சியை இரண்டாக பிரிக்கும் அரசாணையை ரத்து செய்ய வலியுறுத்தி அந்த பகுதியைச் சேர்ந்த 18 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தில் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர். புத்தாநத்தம் ஊராட்சியை பிரிக்ககூடாது, பிரிக்க வேண்டும் என்றால் சரிசமமாக பிரிக்க வேண்டும். இல்லையெனில் பேரூராட்சியாக தரம் உயர்த்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். போராட்டத்தின்போது தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பி வருகின்றனர்.

# ஆசிரியர்களை கைவிட மாட்டேன் : அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உறுதி",

"சென்னை: ஜன.4–

சென்னை நந்தனத்தில் நடந்த நிகழ்ச்சியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று கலந்து கொண்டார். அப்போது அவரிடம் நிருபர்கள் ஆசிரியர்கள் போராட்டம் குறித்த கேள்விகளை சரமாரி கேட்டனர். அதற்கு அவர் பதில் அளித்து கூறியதாவது:ஆசிரியர் போராட்டம் 7 நாட்கள் தொடர்ந்து நடக்கிறது. நான் அவர்களிடம் பேசி வருகிறேன். திருச்சியில் முதலமைச்சர் இதுபற்றி என்னிடம் கேட்டார். தேர்தல் வாக்குறுதியை கேட்கிறார்கள் என்றேன்.ஓய்வூதியம் சார்ந்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. அது முடிந்தவுடன் இடைநிலை ஆசிரியர்கள் சார்ந்த விவாதங்களை நிதித்துறை எங்களிடம் கேட்டுள்ளது. அதனை நாங்கள் தெளிவுபடுத்த இருக்கிறோம். இடைநிலை ஆசிரியர்கள் ஊதிய முரண்பாடு சம்பள கமிஷன்போது ஏற்பட்டது. நிதித்துறை அமைச்சர், செயலாளரிடம் பேசி நல்ல



முடிவை எடுப்போம். ஆசிரியர் போராட்டம் அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. கட்டாயம் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றி தருவோம். இதில் எத்தனை பேர் பாதிக்கப்பட்ட இருக்கிறார்கள் என்ற விவரங்களை சேகரித்து வருகிறோம்.அவர்களின் உணர்வுகளை அந்த துறையின் அமைச்சர் என்ற அடிப்படையில் புரிந்து கொள்கிறேன். நல்ல முடிவை ஏற்படுத்தும் என்பது தான் ஆசை. கண்டிப்பாக பொறுமையாக இருந்தால் நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.ஆசிரியர்களிடம் தொடர்ந்து பேசி வருகிறோம். அவர்கள் ஒரு கட்டத்தில் நிற்கிறார்கள். நாங்கள் ஒரு கட்டத்தில் இருக்கிறோம்.ஆசிரியர்களின் போராட்டம் உணர்வின் வெளிப்பாடு. அதனை ஆர்ப்பாட்டமாக, போராட்டமாக நாங்கள் பார்க்கவில்லை. படித்தவர்கள், எந்த எல்லை வரை போராட வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியும், நாட்டு மக்களுக்கு முன் உதாரணமாக அவர்களை பார்க்கிறேன். எது எப்படி இருந்தாலும் அவர்கள் என்னுடைய குடும்ப உறுப்பினர்கள். கண்டிப்பாக கைவிட மாட்டோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.",

# மழை குறைந்து நீர்வரத்து சீரானது குற்றால அருவிகளில் குளிக்க அனுமதி",

"தென்காசி: ஜன.4–

தென்காசி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு கனமழை கொட்டித்தீர்த்தது. மாவட்டம் முழுவதும் வெளுத்து வாங்கிய கனமழையால் குற்றால அருவிகளில் காட்டாற்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.மெயின் அருவி, ஐந்தருவி, சிற்றருவவி, புலி அருவி என அனைத்து அருவிகளிலும் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் நேற்று காலை முதல் மாலை வரையில் புலியருவி தவிர்த்து மற்ற அருவிகளில் குளிக்க தொடர்ந்து தடை விதிக்கப்பட்டது.இந்தநிலையில் மழை குறைந்ததால் இன்று காலை முதல் மெயின் அருவி, ஐந்தருவி உட்பட அனைத்து அருவிகளுக்கும் நீர்வரத்து சீரானது. இதைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டது.இன்று சனிக்கிழமை விடுமுறை நாள் என்பதால் காலை முதல் சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. அவர்கள் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர். ",

# கூட்டணி பிரச்சனைஉள்கட்சி மோதல்: (முதல்பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டுமோ அதை செய்து வருகிறேன் என்றார்.ஜோதிமணியின் புகாருக்கான பின்னணி காரணம் பற்றி காங்கிரஸ் நிர்வாகிகளிடம் கேட்ட போது, திண்டுக்கல் மாவட்டத்துக்கு உட்பட்ட வேடசந்தூர், ஒட்டப்பிடாரம், பழனி ஆகிய 3 தொகுதிகளை உள்ளடக்கியது ஒரு கட்சி மாவட்டம். இந்த மாவட்டத்தின் தலைவராக ஜோதிமணியின் ஆதரவாளர்தான் நியமிக்கப்பட்டார். தற்போது அந்த மாவட்ட தலைவர் ஜோதிமணிக்கு எதிராக திரும்பி இருக்கிறார்.அவர் ஜோதிமணி பற்றி தரக்குறைவாக விமர்சித்தது தொடர்பாக அவர் மீது விசாரணை நடத்தி நடவடிக்கைக்காக டெல்லி தலைமைக்கு அனுப்பப்பட்டு உள்ளது.இந்த நிலையில் பி.எல்.ஓ.1 படிவம் ஜோதி மணிக்கு குறிப்பிட்ட நாளுக்குள் சென்று சேரவில்லை. இதனால் பி.எல்.ஓ. 2 நியமிக்க தன்னால் முடியவில்லை என்று குற்றம் சாட்டி உள்ளார்.வெளிச்சத்துக்கு வந்தது இந்த காரணங்களாக இருந்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை சாதகமாக்கி மாநில தலைமைக்கு எதிராக அணி திரள்வதாகவே கூறப்படுகிறது.இந்த பரபரப்பான சூழ்நிலையில் காங்கிரஸ் மேலிட பொறுப்பாளரும், பேச்சுவார்த்தை குழுவின் தலைவருமான கிரீஷ் சோடங்கர் 2 நாள் பயணமாக இன்று சென்னை வந்தார்.சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் மாநில நிர்வாகிகள், மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் போது நிர்வாகிகளை தனித்தனியாக அழைத்து ஒவ்வொருவரிடமும் கருத்துக்கள் கேட்டறிந்தார்.கட்சிக்குள் எழுந்துள்ள இந்த பிரச்சனைகளுக்கு காரணம் என்ன என்பது பற்றியும் அவர்களிடம் கேட்டறிந்தார்.தொடர்ந்து இன்று மாலை வரை பல தரப்பு நிர்வாகிகளுடனும் ஆலோசனை நடத்துகிறார்.நாளை (ஞாயிறு) மாநில தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ்குமார் மற்றும் அகில இந்திய செயலாளர்களுடன் ஆலோசனை நடத்துகிறார். நிர்வாகிகளின் கருத்துக்களின் அடிப்படையில் கிரீஷ்சோடங்கர் தனது அறிக்கையை டெல்லி தலைமையிடம் அளிப்பார் என்று கூறப்படுகிறது.",



கடந்த சில நாட்களுக்கு முன்பு கிருஷ்ணகிரி நகர சேர்மனாக இருந்த திமுகவைச் சேர்ந்த பரிதா நவாப், திமுகவின் சூழ்ச்சியால் நகர்மன்ற பதவியை திமுகாவினரே பறித்தனர். இதனால் அதிருப்தி அடைந்த நவாப் குடும்பத்தினர் சொந்த கட்சியே துரோகம் செய்யததால் அதிமுகவின் கடந்த சில நாட்களுக்கு முன்பு அதிமுக கழகத்தின் துணை பொது செயலாளர் முனுசாமி மற்றும் கழகத்தின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமாரின் முன்னிலையில் தனது குடும்பத்தையும் ஆதரவாளர்கள், பல திமுக நிர்வாகிகளுடன் முன்னாள் முதல்வர் கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் முன்னிலையில் கழகத் தொண்டிற்கு இணைத்துக் கொண்டனர். இந்நிலையில் கழகத்தின் துணைச் பொது செயலாளர் முனுசாமி மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பரிந்துரைத்ததன் பெயரில் போற்றுதலுக்குரிய வாழும் தெய்வம் கழகத்தின் இதயத்துடிப்பு புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் பாதையில் இதய தெய்வம் புரட்சித்தலைவி இந்தியாவின் ஆளுமை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேராசியுடன் தொண்டர்களை அரவணைத்து செல்லும் முன்னாள் முதல்வரும் கழக பொதுச் செயலாளர், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடியார், பரிதா நவாப்பை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணி துணை செயலாளராக நியமித்தார்.

கழக தொண்டு செய்ய நியமித்த கழகத்தின் பொச்செயலாளர் அண்ணார் எடப்பாடியார் அவர்களுக்கும், பாசத்திற்குரிய பண்பிற்குரிய அண்ணார் கழக துணை பொது செயலாளர் கே.பி.முனுசாமி அவர்களுக்கும், உறவுகளுள் ஒருவரான வரும் கிருஷ்ணகிரி கீழக்கு மாவட்ட செயலாளருமானவருமான அண்ணார் அசோக்குமார் எம்எல்ஏ கிருஷ்ணகிரி, அவர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்தனர்.

# சேலம் அரசு மருத்துவமனையில் எலி தொல்லையைக் கட்டுப்படுத்தக் கோரி ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் மனு.



சேலம். ஜன. 4

சேலம் அரசு மருத்துவமனையில் எலிகளை கட்டுப்படுத்த கோரியும், நோயாளிகளை பாதுகாக்ககோரியும்!

மருத்துவமனையை சுகாதாரமாக வைத்துக் கொள்ள கோரியும் மருத்துவமனை முதல்வருக்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சேலம் கிழக்கு மாநகர குழு எலி பிடிக்கும் அட்டைகளோடும் கூண்டுகளோடும் மருத்துவமனை முதல்வருக்கு நூதன முறையில் மனு அளிக்கும் போராட்டத்தினை நடத்தினர்.நிகழ்விற்கு கிழக்கு மாநகரத் தலைவர் பிரபாகர் தலைமை வகித்தார். கிழக்கு மாநகர செயலாளர் விமல் குமார் துணைச் செயலாளர் வீரமணி மாநகர குழு உறுப்பினர்கள் ஆனந்த்,அப்பாஸ் மற்றும் மோகன், பூமாலை, மணிகண்டன். மற்றும் பதினைந்துக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டு கல்லூரி முதல்வரை சந்தித்து மனு அளித்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறும் சேலம் அரசு மருத்துவமனையை மருத்துவமனை நிர்வாகம் சரியாக நிர்வாகம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளனர்.

இவ்வியக்கத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் ஞிசீதிமி சேலம் மாவட்ட அமைப்பு குழு சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# சேலத்தில் தாய்,தந்தையை கழுத்தை அறுத்து கொலை செய்ய முயன்ற மகன்: போலீஸார் விசாரணை

சேலம். ஜன.4

சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே குடும்பத் தகராறில் தாய், தந்தையை கழுத்தை அறுத்துக் கொலை செய்த முயற்சித்த மகனை போலீஸார் தேடி வருகின்றனர்.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி அருகே உள்ள வலசக்கல்பட்டி, ஏரிக்காடு அருகே வசித்து வருபவர் சரவணன் (70). இவரது மனைவி பாப்பாத்தி. மகன் தர்மராஜா. தர்மராஜாவிற்கு திருமணமாகி பானுபிரியா என்ற மனைவியும், மூன்று குழந்தைகளும் உள்ளனர்.

இந்நிலையில் கடந்த 30ஆம் தேதி மது போதையில் வீட்டுக்கு வந்த தர்மராஜா அவரது மகளுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். இதனால் மனவேதனை அடைந்த மகள் விஷம் குடித்தார். மயங்கிய நிலையில் இருந்த அவரை தாய் பானுப் பிரியா கெங்கவல்லி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். தீவிர சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மகளை பார்க்கச் சென்ற தர்மராஜா, மனைவியை தன்னுடன் வீட்டுக்கு வருமாறு அழைத்துள்ளார். ஆனால், பானுப்பிரியா அவருடன் செல்ல மறுத்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த தர்மராஜா கடந்த 1ஆம் தேதி மாலை மதுபோதையில் வீட்டுக்கு சென்று தாய் பாப்பாத்தியுடனன் தகராறு செய்து அவரின் கழுத்தை கத்தியால் அறுத்துள்ளார். இதைத் தடுக்க வந்த தந்தையையும் கத்தியால் கழுத்தை அறுத்துள்ளார். இதில் படுகாயமடைந்த இருவரையும் அக்கம்பக்கத் தினர் மீட்டு கெங்கவல்வி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர்.

இது குறித்து கெங்கவல்லி ஆய்வாளர் சாந்தி மற்றும் போலீஸார் வழக்குப் பதிவு செய்து தலைமறைவாக உள்ள தர்மராஜாவை தேடி வருகின்றனர்.



அமைச்சர் முத்துசாமி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில மலர்சந்தை வணிக வளாகம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம், நகரமன்ற தலைவர் நாகராஜ், நகராட்சி ஆணையாளர் மங்கையர்கரசன் உட்பட பலர் உள்ளனர்.

# இந்தாண்டின் முதல் போட்டி; தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டு: 600 காளைகள் ஆக்ரோஷ பாய்ச்சல்: 300 வீரர்கள் மல்லுக்கட்டு



கந்தர்வகோட்டை: ஜன.4–

புதுக்கோட்டை அருகே தச்சங்குறிச்சியில் இந்தாண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி நேற்று நடந்தது. இதில் 600 காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. 300 வீரர்கள் போட்டி போட்டு காளைகளை அடக்கினர். தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி, தமிழகத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடத்தப்படும். மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் ஆகிய இடங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு உலக அளவில் புகழ் பெற்றது.

அதே சமயம் ஒவ்வொரு ஆண்டும் முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம் தச்சங்குறிச்சியில் நடத்தப்படும். அங்கு கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விழாவையொட்டி புனித விண்ணேற்பு அன்னை பேராலயம் அருகில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்படுவது வழக்கம். அதன்படி இந்தாண்டு ஜன. 3ம் தேதி ஜல்லிக்கட்டு நடத்த முடிவு செய்யப்பட்டது. அரசு அறிவுறுத்தியுள்ள வழிகாட்டல் நடைமுறைகளின்படி தேவாலயத்தின் அருகே வாடிவாசல் அமைக்கப்பட்டது. காளைகள் வரிசையாக அனுமதிக்கப்படும் இடத்தில் காளைகள் மீது வெயில் படாமல் இருப்பதற்காக மேற்கூரைகள் அமைக்கப்பட்டன. காளைகளை வீரர்கள் அடக்கும் பகுதியில் தேங்காய் நார்கள் கொட்டப்பட்டன. ஜல்லிக்கட்டில் அவிழ்த்து விடுவதற்காக தஞ்சை, சிவகங்கை, திருச்சி, மதுரை, அரியலூர் உள்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து 600 காளைகள் அழைத்து வரப்பட்டன. 300 வீரர்கள் வந்திருந்தனர். காளைகளுக்கும், வீரர்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

காலை 8.30 மணிக்கு ஜல்லிக்கட்டு துவங்கியது. கலெக்டர் அருணா முன்னிலையில் வீரர்கள் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். அமைச்சர் மெய்யநாதன் கொடியசைத்து போட்டியை தொடங்கி வைத்தார். வாடிவாசல் வழியே முதலில் 10 கோயில் காளைகள் மற்றும் உள்ளூர் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. இதைத் தொடர்ந்து மற்ற காளைகள் ஒவ்வொன்றாக அவிழ்த்து விடப்பட்டன. வாடிவாசலில் இருந்து பாய்ந்து வந்த காளைகளை, வீரர்கள் உற்சாகத்துடன் அடக்கினர். அப்போது அங்கு திரண்டிருந்த மக்கள் கைதட்டி வீரர்களை உற்சாகப் படுத்தினர். சில காளைகள் ஆக்ரோஷமாக களத்தில் நின்று விளையாடி வீரர்களுக்கு தண்ணி காட்டியது.

போட்டியில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்கு பைக்குகள், கட்டில், சேர், குக்கர், வேட்டி மற்றும் சில்வர் பாத்திரங்கள் பரிசாக வழங்கப்பட்டது. சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு இந்தாண்டின் முதல் ஜல்லிக்கட்டை ரசித்து பார்த்தனர்.

# எம்.ஜி.ஆர்.சிலைக்கு மாலை அணிவிக்க சென்ற செங்கோட்டையனுக்கு அ.தி.மு.க.வினர் எதிர்ப்பு ,

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளரும், கொங்குமண்டல அமைப்பு செயலாளருமான முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நேற்று மேட்டுப்பாளையத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதற்காக அவர் கோபியில் இருந்து கார் மூலமாக சிறுமுகை, ஆலாங்கொம்பு வழியாக மேட்டுப்பாளையத்துக்கு வந்தார். அவருக்கு சிறுமுகை பெத்திக்குட்டை பகுதியில் தமிழக வெற்றிக்கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனை தொடர்ந்து செங்கோட்டையன் மற்றும் தமிழக வெற்றிக்கழகத்தினர் ஆலாங்கொம்பில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவிக்க சென்றனர்.இந்த சிலை அ.தி.மு.க சார்பில் அமைக்கப்பட்டது என்பதால் அ.தி.மு.க.வினர் செங்கோட்டையன் மாலை அணிவிக்க எதிர்ப்பு தெரிவித்து, முன்கூட்டியே சிலைக்கு பூட்டு போட்டு சென்றனர். இதையடுத்து செங்கோட்டையன் மேட்டுப்பாளையம் வந்தார். மேட்டுப்பாளையம் வந்ததும் அவருக்கு கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதன்பின்னர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த கட்சியினருடன் சென்றார்.ஆனால் தமிழக வெற்றிக்கழகத்தினர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க அனுமதி வாங்காததால், அண்ணா சிலையும் பூட்டப்பட்டு இருந்தது.இதையடுத்து அண்ணா சிலை முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணா படத்திற்கு செங்கோட்டையன் கட்சியினருடன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதன்பின்னர் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தேக்கம்பட்டி வனபத்ரகாளியம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார். அங்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.அதனை தொடர்ந்து காரமடையில் உள்ள அரங்கநாதர் கோவிலிலும் அவர் சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து அவர் மேட்டுப்பாளையம் எல்.எஸ்.புரத்தில் தமிழக வெற்றிக்கழகத்தின் புதிய அலுவலகத்தை திறந்து வைக்க உள்ளார்.",



கோயம்புத்தூர் மாட்டம் கிணத்துக்கடவு வட்டம் வடசித்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட மருத்துவ அலுவலர் மரு.பாலுச்சாமி உள்ளார்.

# திருப்பூரில் அரசியல் மாற்றம் வேண்டும் என அதிமுக மற்றும் தேசியக்கொடியுடன் டவர் மீது ஏறி போராட்டம்

திருப்பூர்: ஜன.4–

திருப்பூர் தாராபுரம் சாலை வாய்க்கால் மேடு பகுதியில் அரசியல் மாற்றம் வேண்டும் என அதிமுக மற்றும் தேசியக்கொடியுடன் டவர் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது

திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட தாராபுரம் சாலை கோவில் வழி அருகே உள்ள பிஎஸ்என்எல் நபர் ஒருவர் 40 அடி உயர டவர் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டார். டவர் மீது ஏறிய நபர் தேசியக்கொடி மற்றும் அதிமுக கொடியை டவர் மீது கட்டி சிஸ்டம் சரியில்லை எனவும் அரசியல் மாற்றம் வர வேண்டும் என வலியுறுத்தி வந்தார்.

தொடர்ந்து திருப்பூர் தெற்கு தீயணைப்புத் துறையினர் மற்றும் நல்லூர் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து அவரிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். தொடர்ந்து மேலிருந்தவாறு பட்டாசுகளையும் பற்ற வைத்து கீழே எரிந்து வந்துள்ளார். தொடர்ந்து அவரிடம் நிதானமாக பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

மேலிருந்தவாறு கீழே அதிமுக நபருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர் தன்னுடைய கோரிக்கை அனைத்து ஊடங்களிலும் ஒளிபரப்பாக வேண்டும், அதிமுக தலைமைக்கு எனது கோரிக்கைகள் சென்று அவர்கள் நிறைவேற்ற முன்வர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி



வந்தார்.

தொடர்ந்து அவரிடம் நிதானமாக பேசிய போலீசார் மற்றும் தீயணைப்புத் துறையினர் அவரை தானாகவே கீழே இறங்கச் செய்தனர். கீழே இறங்கி வந்தவரிடம் விசாரணை மேற்கொண்ட போது அவர் வாழப்பாடி பகுதியை சேர்ந்த மூக்கையா (42) என்பதும் , திருப்பூர் கோவில் வழி பகுதியில் தங்கி பனியன் நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார்.

அரசியல் மாற்றம் வர வேண்டும் என வலியுறுத்தினார். தொடர்ந்து அவரை விசாரணைக்காக நல்லூர் போலீசார் காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். சம்பவத்தை தொடர்ந்து இதனை வேடிக்கை பார்க்க நூற்றுக்கணக்கான மக்கள் சம்பவ இடத்தில் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

போலீசார் அவர்களை அப்புற படுத்தி டவறின் மீது ஏறி கீழே இறங்கிய மூக்கையா என்பவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர் இதனால் அவ்விடத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. மூக்கையா கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இதே போல் தாராபுரம் சாலையில் உள்ள வேறொரு டவரில் மேலே ஏறி இதுபோன்ற பரபரப்பை ஏற்படுத்தியவர் என்பதை குறிப்பிடத்தக்கது.

# கான்கிரீட் தளம் அமைக்கும் இடத்தை ஆய்வு செய்த ஈரோடு ஆட்சியர்



ஈரோடு மாவட்டம் தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, பெருமுகை ஊராட்சியில், வடிகாலுடன் கூடிய கான்கிரீட் தளம், ரூபாய் 10.95.000/ கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். துறை சார்ந்த அதிகாரிகள் உடன் உள்ளனர்.

# திருவள்ளூர் அடுத்த வெண்மனம்புதூரில் கேஸ் கசிவால் ஏற்பட்ட தீ விபத்து சாதுர்யமாக செயல்பட்டு தீயை அணைத்ததால் அசம்பாவிதம் தவிர்ப்பு



திருவள்ளூர் ஜன 04 :

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் வெண்மனம் புதூர் தனலட்சுமி நகரில் வசித்து வருபவர் நரசிம்மன் (57). ஓய்வு பெற்ற ராணுவ வீரரான இவரது மனைவி ஹேமாவதி (47) என்பவர் நாளை சிவன் கோவில்களில் ஆருத்ரா தரிசனம் நிகழ்ச்சி நடைபெற இருப்பதால் வெண்மனம் புதூரில் உள்ள சிவன் கோவிலுக்கு களி செய்வதற்காக வீட்டு வராண்டா பகுதியில் இரும்பு ஸ்டவ் அடுப்பு அருகில் எரிவாய் சிலிண்டரை வைத்து அரிசியை வறுத்துள்ளார். அப்போது இரும்பு அடுப்பில் இருந்து வெளியான தீ ஜுவாலைப்பட்டு சிலிண்டர் பைப் தீப்பிடித்து எளிய தொடங்கியது.

இது குறித்து உடனடியாக திருவள்ளூர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த ஹேமாவதி மற்றும் அவரது மகன் ஜெயபிரகாஷ் ஆகியோர் சாதுர்யமாக செயல்பட்டு பெட்ஷீட்டை தண்ணீரில் நனைத்து எரிந்து கொண்டிருந்த சிலிண்டர் மீது போட்டு கட்டுப்படுத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து உடனடியாக அருகில் உள்ள கடையிலிருந்து தீயணைப்பாணி கொண்டு வந்து தீ மேலும் பரவாமல் முற்றிலுமாக அனைத்து உள்ளனர். இருப்பினும் விரைந்து வந்த தீயணைப்புத்துறை உதவி மாவட்ட அலுவலர் செல்வராஜ் தலைமையில் தீயணைப்பு அலுவலர்கள் நேவிஸ், குமரகுரு, பிரகாஷ் கார்த்திக், விஜய் ஆகிய தீயணைப்புத் துறையினர் எரிவாயு சிலிண்டரை வீட்டு வெளியே கொண்டு வந்து எரிவாயுவை முற்றிலும் வெளியேற்றினர்.

சாதுர்யமாக செயல்பட்டு தீயை அணைத்தாலும், இரும்பு அடுப்பு அருகில் எரிவாயு சிலிண்டரை வைத்து சமையல் செய்தது தவறு என்றும், வீட்டிற்குள் சமையல் செய்யும்போது இந்த தீ விபத்து ஏற்பட்டிருந்தால் பெரும் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கும் என்றும் , வராண்டாவில் வைத்து சமையல் செய்ததால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாகவும் தீயணைப்பு துறையினர் தெரிவித்தனர். நேற்று விருகம்பாக்கத்தில் கேஸ் சிலிண்டர் கசிவு ஏற்பட்டு டிவியை ஆன் செய்த போது ஏற்பட்ட அழுத்தத்தால் வீடு முற்றிலும் சேதம் அடைந்தது குறிப்பிடத்தக்கது.

# சாத்தூர் சட்டவிரோதமாக பட்டாசு தயாரிப்பு: இருவர் கைது

சாத்தூர்: ஜன.4–

சட்டவிரோதமாக பட்டாசு கருந்திரி தயாரித்த நேற்று 2 பேர் பலியான வழக்கில் இருவர் கைது செய்யப்பட்டனர். சட்டவிரோதமாக பட்டாசு தயாரித்த உரிமையாளர் சரவணக்குமார், மேற்பார்வையாளர் பெருமாள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

# ரோட்டுபாளையத்தில் விஜயகாந்த் நினைவு தினத்தை முன்னிட்டு அன்னதானம்.




மேல்மலை யனூர்,ஜன.4

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் ரோட்டு பாளையத்தில் தே.மு.தி.க நிறுவனர் விஜயகாந்த் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு ஒன்றிய மகளிர் அணி செயலாளர் தீபிகா தலைமையில் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கிளைக் கழக செயலாளர் அன்பரசன், கிளைக் கழக துணை செயலாளர் சீனு முன்னிலை வகித்தனர்.

மாவட்ட பிரதிநிதி கதிர்வேல், சாதிக், காசிநாதன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை செயலாளர் சதீஷ்குமார் உள்ளிட்டோர்கள் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக ஒன்றிய கழக செயலாளர் சின்னதுரை கலந்துகொண்டு மறைந்த விஜயகாந்த் அவர்களின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு அன்னதானமாக சிக்கன் பிரியாணி வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் கிளைக் கழக செயலாளர் வளத்தி மோகன், கடலி மூர்த்தி மற்றும் நிர்வாகிகள் தமிழ்,சீனு தன்சிகா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் வேலாயுதம் நன்றி கூறினார்

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421